SC No.103/2025

24.02.2026

PW1

**திருமதி ஜனனி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(Accused present).

**குறுக்கு விசாரணை**

எனக்கு திருமணமானபின் நான் நல்லாடை சென்று விட்டேன். என் அம்மா இறந்தபோது நான் ஊரில் இல்லை. பிறர் சொல்லி கேட்டுதான் புகாரை கொடுத்தேன் என்றால் ஆமாம். புகார் சம்பவம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. என் அம்மா வீட்டு பசு மாடு கொம்பு உள்ள மாடுதான், அது என் அம்மா வீட்டின் பின்பக்கம் இருக்கும் என்றால் சரி. பின்பக்கம் இருட்டு நேரத்தில் என் தாயார் சென்றபோது மாடு முட்டி இறந்து விட்டார் என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் என் தாயாருக்கும், என் தாத்தாவிற்குமிடையே பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அம்மா ஆஜர் எதிரியிடம் வாங்கிய பணத்தை திரும்ப

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:21:33 +0530

கொடுக்காததால் முன் விரோதம் இருந்து வந்தது எனவும் அந்த பிரச்சனையை முன்வைத்து இந்த வழக்கு தொடரப்பட்டது எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:21:38 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.